**Deposition of Witness**
**In the Court of Additional Subordinate Judge, Tenkasi.**

Mcop 298/2021

எ.ம.சா1 முத்துக்குமார்

| | | |
|---|---|---|
| Name | : | முத்துக்குமார் |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Occupation | : | |
| Age | : | |
| Date | : | 05.02.2026 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிருபண வாக்குமூலம் தாக்கல்

நான் 3ம்எதிர்மனுதாரர் நிறுவனத்தில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் என் நிறுவனம் சார்பாக என்னுடைய நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

1. 17.03.2021ம் தேதியிட்ட எங்களது நிறுவன களப்பணியாளர் அறிக்கை எ.ம.சா.ஆ1.
2. டி.என்.76.பி.1775 என்ற வாகனத்திற்கு 18.1.2018 முதல் 17.01.2019 வரை எங்களது நிறுவனம் வழங்கிய காப்பீடு சான்று உண்மை நகல் எ.ம.சா.ஆ 2.

மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் தாக்கல் செய்துள்ள களப்பணியாளர் அறிக்கை எ.ம.சா.ஆ1 சட்டபடி ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல. விபத்தில் இருசக்கர வாகனத்தை ஒட்டிசென்றவருக்கும், ஆட்டோவில் சென்றவருக்கும் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து எதனால் ஏற்பட்டது என்பது எ.ம.சா.ஆ1 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. களப்பணியாளர் விபத்தை பார்க்காமல்

அவரது அறிக்கையில் கூறியுள்ளார் என்றால் பார்த்த நபர்களை விசாரித்து கூறியுள்ளார். களப்பணியாளர் அறிக்கையில் வாக்குமூலம் கொடுத்த நபர்களின் கையெழுத்து எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். எ.ம.சா.ஆ 1 ஆவணமானது வாக்குமூலமாக தாக்கல் செய்யாமல், கையெழுத்தும் இல்லாமலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். களப்பணியாளர் அறிக்கையின் அடிப்படையில் மட்டுமே தான் நான்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மற்ற விபத்து சம்பந்தமான ஆவணங்களின் அடிப்படையிலும் சாட்சியம் அளிக்கிறேன். அந்த குற்ற வழக்கு இதுநாள்வரை நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். தன் மீது தவறாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக தற்போதும் மனுதாரர் வழக்கை மேல்நடத்தி வருகிறார் என்றால் வழக்கு நிலுவையில் உள்ளது. நான் ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் மனுதாருக்கு இழப்பீடு கொடுப்பதில் இருந்து எங்களது நிறுவனத்தை காப்பற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் சாட்சியம் உண்மைக்கு புறம்பானதும், ஏற்றுகொள்ளதக்கதும் அல்ல என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ். முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.